

உலக மனநல நாள் -10.10.2013




உலக தாத்தா, பாட்டி தினவிழா-11.09.2013



கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தல்

# விழிப்புணர்வு செய்திகள்

- சமுதாயத்தில் மனவளர்ச்சி குறைந்தோர்களை வெறுத்து ஒதுக்காமல், அவர்களையும் சக மனிதர்களாக மதித்து நடக்க வேண்டும். ஊனத்தை காரணம் காட்டி அவர்களின் உரிமைகளை மறுக்கக்கூடாது. சமஉரிமை வழங்கப்பட வேண்டும்.
- இவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது என்று நினைத்து வாய்ப்புகள் ஏதும் கொடுக்காமல் இருப்பதைவிட, இவர்களிடம் உள்ள திறன்களை கண்டறிந்து பயனுள்ள வகையில் அதில் அவர்களுக்கு முறையான பயிற்சிகளை கொடுக்க வேண்டும்.
- இவர்களால் செய்யப்படும் ஒவ்வொரு சாதனையையும், அரசும், சமுதாயமும் முறையாக அங்கீகரித்து அதற்குரிய வெகுமதிகளையும், பாராட்டுக்களையும், சான்றிதழையும் எவ்வித பாரபட்சமும் இல்லாமல் வழங்கிட வேண்டும்.
- அரசுத்துறையில் வேலை வாய்ப்பில் மற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு முறையே வழங்கப்படும் 3% இடஒதுக்கீட்டைப் போல், மிதமான மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் 1% இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.



பொதுமக்களிடம் மனவளர்ச்சி குறை பற்றிய விழிப்புணர்வு கையெழுத்து பெறுதல்

எனக்கு மனசும், உடலும் ரொம்ப பலவீனமா இருக்கிறதால நான் நல்லபடி இருப்பதற்கு உங்க எல்லாருடைய உதவியும் எனக்கு தேவை. எனக்கு உதவி செய்வீர்களா !!

Since 1996

**பெத்சான் சிறப்பு பள்ளி**

( மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )
தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது & மத்திய அரசின் பதிவு பெற்றது
3/369 - B, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.
Phone : 0452 - 2 660 770 ; 98949 28666 ; 9894476662
E-mail : bethshanschool@gmail.com | website : www.bethshanschool.org



Since 1996

**BETHSHAN**
SPECIAL SCHOOL

# நிகழ்வுகள் 2013
## ஆண்டு அறிக்கை




*அன்புடையீர்,*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நல்நாமத்தில் பெத்சான் சிறப்பு பள்ளியின் வாழ்த்துக்களும், வணக்கங்களும்.

பெத்சான் சிறப்பு பள்ளியானது கடந்த 17 ஆண்டுகளாக தமிழக அரசின் அங்கீகாரத்துடனும், மத்திய அரசின் தேசிய அறக்கட்டளையில் பதிவுபெற்ற நிறுவனமாகவும் செயல்பட்டுவருகின்றது. கடந்த வருடங்கள் முழுவதும் எமது பள்ளியின் மூலம் மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளின் வாழ்வின் நலனுக்காக பல்வேறு பணிகளை சிறப்பான முறையில் செய்து வந்துள்ளோம். அதே போல் 2013 ஆம் ஆண்டு முழுவதும் வரை நடைபெற்ற முக்கியமான சில நிகழ்வுகளை மட்டும் தொகுத்து அறிக்கையாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த சிறப்புக் குழந்தைகளையும் கடவுள் தன்னுடைய ஆதீன திட்டத்தின்படி இந்த உலகத்தில் பிறக்கச் செய்து பராமரித்து வருகிறார். ஆகவே, நாம் முதலாவது கடவுளுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

எமது பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகித்து வரும் நீங்கள் இந்த சமூகப் பணி சிறப்பான முறையில் தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு எந்தவிதமான பிரதிபலனும் பாராமல் தாராளமாக பணத்தினாலும், பொருளாலும், உடல் உழைப்பாலும், நல்ல ஆலோசனைகளை வழங்கியும், ஜெபித்தும் வருகின்றீர்கள் உங்களுக்கு எங்களது இதயப்பூர்வமாக நன்றிகளை நிர்வாகத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம். கடவுள் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், நீங்கள் செய்து வரும் தொழிலையும் மிகுதியாக ஆசிர்வதிப்பாராக.

நீங்கள் காண்பித்துவரும் அன்பையும், உதவியையும் தொடர்ந்து இனிவரும் நாட்களிலும் செய்திட உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு சமயம் கிடைக்கும்போது அவசியம் குடும்பத்தோடு எமது பள்ளியை பார்வையிட்டு எமது சிறப்புக் குழந்தைகளோடு உங்கள் அன்பை பகிர்ந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

சமூக பணியில்,
R.ரவிக்குமார்
முதல்வர்




**2014**

இந்த சிறியரில் ஒருவனுக்கு
நீங்கள் எதைச் செய்தீர்களோ
அதை எனக்கே செய்தீர்கள்.
- இயேசுகிறிஸ்து -



பள்ளியின் சுற்றுச்சுவர் திறப்பு விழா
( உதவி : மேக்ஸ் பிராப்பர்ட்டீஸ் நிறுவனம் )




மத்திய அரசின் உதவியுடன் தொழிற்கல்வி பயிற்சி



இயற்கை சூழலில் கற்றறிதல்




சிறப்பு ஒலிம்பிக் பயிற்சிகள்



பெற்றோர் ஆலோசனைக் கூட்டம்



கொடைக்கானலில் மலையேற்றப் பயிற்சி

இந்த உலகில் நாம் பார்க்கின்ற
எல்லாம் ஒருநாள் அழிந்துவிடும்,
ஆனால், சத்தியம் மட்டும் என்றுமே
அழியாமல் நிலைத்து நிற்கும்.



நமது பள்ளியைப் பற்றிய
செய்திகளை பேஸ்புக்கில் காணலாம்.

Face Book : BETHSHAN SPECIAL SCHOOL



# சாதனை சிகரங்கள்



சர்வதேச அளவில்
தென்கொரியாவில்
நடைபெற்ற சிறப்பு
ஒலிம்பிக் போட்டியில்
வெள்ளிப்பதக்கம்
பெற்ற மாணவர் P.பாலு.




ஆசிய பசிபிக் நாடுகளுக்கிடையே ஆஸ்திரேலியாவில்
நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் போட்டியில்
வெள்ளிப்பதக்கம் பெற்ற மாணவி J.ஜோன்ஸ் மெர்லின்.



சிறந்த பணியாளருக்கான தமிழக அரசின்
மாநில விருது பெற்ற P.ராபர்ட் தினகரன்.

மதுரை லேடி டோக் மகளிர் கல்லூரியில்
பணிநியமனம் பெற்ற மாணவி சந்தியாதேவி





கடவுள் எனக்கு நல்ல
வேலையை கொடுத்து
ஆசீர்வதித்திருக்கிறார்.
என்னால் முடிந்தவரை
என்னுடைய வேலைகளை
கடவுளுக்காக சிறப்பாக
செய்வேன்.

இந்த சிறியரில் ஒருவனுக்கு
நீங்கள் எதைச் செய்தீர்களோ
அதை எனக்கே செய்தீர்கள்.
- இயேசுகிறிஸ்து -